இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 25 ISSUE 02 FEBRUARY 2025

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-

## நீங்களும் தேவனுடைய பொக்கிஷமாயிருக்கிறீர்கள்



இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

# ISRAEL - BIBLE LAND TOUR

# 2025



சகோதரர். L. வின்சென்ட்ராஜ் மற்றும்
சகோதரி. கலாவின்சென்ட்ராஜ் அவர்களுடன்


## இஸ்ரேல், ஜோர்டன், எகிப்து

## மே 1–10
(10 நாட்கள்)









**எங்களோடு வேதாகம தேசத்திற்கு வாருங்கள்**

- தினமும் அதிகாலை பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நிறைந்த ஆராதனை,
- யோர்தான் நதிக்கரையில் ஆராதனை,
- இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த இடங்கள்,
- இயேசு அற்புதம் செய்த பரிசுத்த ஸ்தலங்கள்,
- கெத்செமனே தோட்டத்தில் ஜெப நேரங்கள்,
- பத்து கற்பனைகளைப் பெற்ற சீனாய் மலை,
- கலிலேயா கடலில் தேவனைத் துதித்தல்,
- நைல் நதியில் படகு சவாரி.

**94428 00449**

தொடர்புக்கு:

**94428 00449,
94428 00447, 94980 00449**

உடனே உங்கள் பாஸ்போர்ட் நகலை எங்கள் அலுவலக
வாட்ஸ்அப் எண்ணிற்கு
அனுப்பி முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

45 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

(சென்னையில் இருந்து புறப்பட்டு மீண்டும்
சென்னை வரும் வரை
அனைத்து செலவுகளும் உட்பட)

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். சங் 113:4–ல் கர்த்தர் எல்லா ஜாதிகள் மேலும் உயர்ந்தவர், அவருடைய மகிமை வானங்களுக்கு மேலானது என்ற வார்த்தையின்படி எல்லாவற்றைக் காட்டிலும் அவருடைய கிருபை, மகிமை மேலானது என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த மேலான வாழ்க்கைக்குத் தான், நாம் தேவனை நேசித்து பின்பற்றுகிறோம். தேவனுடைய கிருபையினால் கடந்த ஜனவரி 1–ஆம் தேதி நமது ஜெபமையத்தில் நடைபெற்ற வாக்குத்தத்தக் கூட்டத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். அதைத் தொடர்ந்து ஆணாரில் நடைபெற்ற திறப்பின் உபவாச ஜெபத்தையும் தேவன் ஆசீர்வதித்து, மகிமையாய் வெளிப்பட்டார், ஜனங்களுக்குள்ளே உயிர் மீட்சியைக் கொண்டு வந்தார். இரண்டாவது சனிக்கிழமை நடைபெறும் உபவாச ஜெபத்தையும், மதுரையில் நடைபெறும் எழுப்புதல் உபவாச ஜெபத்தையும் தேவன் ஆசீர்வதித்து வருகிறார் தேவனுக்கே மகிமை உண்டாவதாக. தொடர்ந்து தேவன் நமக்கு கொடுத்த கிருபையையும், ஊழியத்தையும் அவருக்காக மகிமையோடு செய்ய ஜெபித்துக் கொள்ளுங்கள். இயேசுவை அறியாத ஜனங்கள் மத்தியில், நாம் இயேசுவை அறிவிக்கவும், ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். நம்முடைய யூடியூப் சேனலில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்து, அநேக ஆத்துமாக்களை இரட்சிக்க கருத்தாய் ஜெபியுங்கள். நமது ஊழியததின் வளர்ச்சிக்காகவும், அதன் தேவைகளுக்காகவும் ஜெபித்து தாங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



இயேசுவின் பணியில்
L. Vincentraj
(சகோ .L.வின்சென்ட்ராஜ்)

# நீங்களும் தேவனுடைய பொக்கிஷமாயிருக்கிறீர்கள்



சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய வார்த்தையின் மூலமாய் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைக்கு உலகம் முழுவதும் உள்ள ஜனங்களை காரிருள் மூடிக்கொண்டிருக்கிறது. பூமியை அந்தகாரம் சூழ்ந்து கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் இருள். சமாதானம் இல்லை. வேலையில் பிரச்சனை. தொழிலில் பிரச்சனை. வியாதி. பெலவீனம். மருத்துவர் சொல்லுகிறார் வியாதி ரொம்ப முத்திவிட்டது. எலும்பெல்லாம் அரித்து விட்டது. அந்த உறுப்பை எடுக்க வேண்டும் என்று சொல்லி நம்மை பயமுறுத்து கிறார்கள். மருத்துவர்களால் ஒரு பக்கம் வேதனை. வியாதியினால் ஒரு பக்கம் வேதனை. எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று தெரியாது. திடீர் திடீரென்று மாற்றங்கள் நம் தேசத்தில் நடந்து கொண்டிருக்கிறது. நிலச்சரிவுகள். புயல்கள். வெள்ளங்கள். தொற்றுநோய்கள். உயிர்இழப்புகள். பொருட்சேதங்கள் ஏற்படுகிறது. காரிருள் ஜனங்களை மூடிக்கொண்டு இருக்கிறது. உண்ண உணவு. குடிக்க தண்ணீர் இல்லை. எங்கு பார்த்தாலும் யுத்தங்களும். யுத்தங்களின் செய்திகளும் கேள்விப்படுகிறோம். அப்பாவி ஜனங்கள் பாதிக்கப்படுகிறார்கள். காரிருள் மூடி அவர்களை வேதனைப்படுத்துகிறது.

கடந்த சில வருடங்களுக்கு முன்பாக இலங்கையில் பயங்கரமான வறுமையான சூழ்நிலை உண்டானது. உணவு பொருள்களின் விலை அதிகமானது. ஜனங்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். வாழ வழி தெரியாமல் திகைத்தார்கள். சில மாதங்களுக்கு முன்பாக வங்காள தேசத்திலும் இருளால் அந்த தேச மூடப் பட்டதனால் அங்கும் ஒரே புரட்சி. போராட்டம் ஏற்பட்டது. இப்படியாக இன்னும் பல தேசங்களிலும் இந்த மாதிரியான நிலைமைகள் நீடித்துக் கொண்டிருக்கிறது. தேசங்கள் காரிருளுக்குள் கடந்து சென்று கொண்டிருக்கிறது. உலகத்தின் பல பகுதிகளிலும் இப்படிப்பட்டதான வேதனையான சம்பவங்களும். வேதனையான காரியங்களும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. என் ஆட்சி நிலைக்கும். என் தொழில் நிலைக்கும். என் குடும்பம் நிலைக்கும். என் பிள்ளைகள் நிலைப்பார்கள் என்று கற்பனை உலகத்தில் ஓடிக் கொண்டிருக்கிற மனிதனுக்கு எப்போது சடுதியாக என்ன சம்பவிக்கும் என்றும். என்ன ஆபத்து. அழிவு வரும் என்றும் தெரியாது. அப்படிப்பட்ட உலகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். **எழும்பிப் பிரகாசி. உன் ஒளிவந்தது. கர்த்தருடைய மகிமை உன் மேல் உதித்தது. இதோ. இருள் பூமியையும். காரிருள் ஜனங்களையும் மூடும். ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார். அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். ஏசாயா 60:1.2** இருள் பூமியையும். காரிருள் ஜனங்களையும் மூடி கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு சின்ன கூட்டத்திற்கு கர்த்தர் சொல்லுகிறார் எழும்பி பிரகாசி. உன் ஒளி வந்தது. உன் வேளை வந்து விட்டது என்று. கர்த்தரை அறியாத. கர்த்தரை தேடாத. கர்த்தரை நம்பாத மனிதனுக்குத் தான் காரிருள் ஜனங்களை மூடும் என்று வேதம் சொல்லுகிறது. தேவனுடைய மகிமையான ஒளி. வெளிச்சம் உங்கள் மேல் வரும் போது. உங்கள் வாழ்க்கையில் நடக்கும் மாற்றங்களை இப்பொழுது பார்ப்போம்

## இருளான வாழ்க்கை வெளிச்சமானது

இயேசு என்ற நாமத்தை சொல்லி யாராவது ஜெபித்தால், பிரசங்கம் செய்தால் அவர்களை துன்பப்படுத்தவும், கொல்லவும் வேண்டும் என்று சொல்லி, அரசாங்க கட்டளையை வாங்கிக் கொண்டு நண்பகலிலே குதிரையிலே தமஸ்கு பட்டணத்திற்கு சவுல் பிரயாணம் பண்ணினான். அவனோடு கூட 72 பேர் சென்றார்கள் என்று ஒரு சரித்திர புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது. அப்படி செல்லும்போது நண்பகல் வேளையிலே சூரியனை காட்டிலும் பிரகாசமான ஒரு ஒளி வானத்திலிருந்து அவனை சுற்றி பிரகாசித்தது. இதுவரை அவன் பார்த்திராத ஒளி அது. இதுவரை அவன் அடிதடியிலே வாழ்ந்த ஒரு மனிதன், சண்டை போட்டவன், ஆணவமாய் வாழ்ந்தவன், என்னை அசைத்துப் பார் என்று சவால் விடுகிறவன். இன்றைக்கும் கூட இப்படிப்பட்ட மனிதர்கள் நம் நடுவில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

இயேசுவின் நாமத்தை சொல்லி தொழுது கொள்ளுகிற எல்லாரையும் துன்பப்படுத்தி, அவர்களை இனி இயேசுவின் நாமத்தை சொல்லா தவாறு கிறிஸ்தவத்தை முடக்கி விட வேண்டும் என்று சென்றவன். கிறிஸ்தவத்தை, கிறிஸ்தவர்களை ஒருநாளும் ஒருவரும் முடக்கி விட முடியாது. அப்படி முடக்கம் முயன்றால் தேவன் யார் என்று அவர்களுக்கு தெரிய வரும். சவுல் தன்னைச் சுற்றி பிரகாசித்த ஒளியின் மத்தியிலிருந்து வந்த ஒரு சத்தத்தை கேட்டான். சவுலே, சவுலே நீ, என்னை ஏன் துன்பப்படுத்து கிறாய் என்று, அதற்கு அவன் ஆண்டவரே நீர் யார் என்றான். அதற்கு கர்த்தர், நீ துன்பப் படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. நான் அவரை கண்டபோது செத்தவனைப் போல விழுந்தேன் என்று யோவான் சொல்லுகிறார். அவருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டேன், அவருடைய வார்த்தைகளின் சத்தத்தை நான் கேட்கும்போது, நான் முகங்கவிழ்ந்து, நித்திரை போகிறவனாய்த் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தேன். என் உடம்பெல்லாம் நடுங்கினது என்று தானியேல் சொல்லுகிறான். நாம் ஆராதிக்கின்ற தேவன் வல்லமையும் பராக்கிரமமும் நிறைந்தவர்.

தேவனுடைய ஒளியின் பிரகாசத்தினால் நிற்க முடியாமல் கீழே விழுந்த அவன், அப்பொழுது கூட அவனுடைய ஆணவம் குறையவில்லை. நீர் யார் என்று சொல்லி கேட்கிறான். சிலருக்கு ஒரு பெரிய டிபார்ட் மெண்ட்ல வேலை செய்தால் தலைகனம் இருக்கும், நான் எங்கு வேலை செய்றேன் தெரியுமா என்பார்கள். இதே போல தான் சவுல் கீழே விழுந்தும் நான் யார் தெரியுமா என்றும், நீர் யார் என்று அவரை கேள்வி கேட்கிறான். அந்த ஒளியின் பிரகாசத்தினால் கண்களை இழந்தான். தேவனை அவனால் பார்க்க முடியவில்லை. அவருடைய வார்த்தையை மாத்திரம் தான் கேட்டான். மனந்திரும்பின பின்பு கலாத்தியர் நிருபத்தை எழுதும்போது நீங்கள் எனக்காக உங்கள் கண்களையும் பிடுங்கி கொடுக்க மனதாய் இருந்தீர்கள் என்று எழுதுகிறான். சில பிரச்சனைகளை நாம் சந்திக்கும் போது நம்முடைய சரீரத்தில் வலியும், மனதில் வேதனையும் ஏற்படும். ஆனால் பவுல் அப்போஸ்தலனாக மனந்திரும்பின பின்பு தன்னுடைய நிருபங்களில் நான் விசுவாசித் திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் என்று எழுதுகிறார். சவுலாக வாழ்ந்த வாழ்க்கையை விட்டுவிட்டு தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ பவுல் அப்போஸ்தலன் தன்னை அர்ப்பணித்தார். இதுவரைக்கும் முள்ளாக இருந்த உங்கள் வாழ்க்கையை கர்த்தர் அற்புதமாக, அடையாளமாக மாற்றப் போகிறார். உங்களுக்குள்ளும் ஒரு வெளிச்சம் இன்றைக்கு உதிக்கிறது.

## தேவ இரக்கத்தினால் வாழ்க்கை பொக்கிஷமானது

முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப் படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனு மாயிருந்தேன், அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்.
1 தீமோத் 1:13

பவுல் அப்போஸ்தலன் தமஸ்கு போவதற்கு முன், இயேசுவை அறிகிறதற்கு முன் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களை துன்பப்படுத்துகிறவனாக, தூசிக்கிறவனாக, கொடுமைப்படுத்துகிறவனாக இருந்தேன் என்கிறார். சில வீடுகளில் கூட கொடுமையான வார்த்தைகளை பேசுவார்கள். அது கணவனாக இருக்கலாம் அல்லது மனைவியாக கூட இருக்கலாம். எங்கே போயிட்டு வருகிறாய்? யார் பின்னாடி சுத்திட்டு வருகிறாய்? ஏன் இவ்வளவு லேட்டா வருகிறாய் என்று சொல்லி சின்ன சின்ன விஷயத்தை கூட பெருசா பேசி, பிரச்சனையை பெரிதாக்கி விடுகிறார்கள். இன்றைக்கு பைபிளை தூக்கிக்கொண்டு சபைக்கு போகின்ற குடும்பங்களில் கூட இப்படிப்பட்ட சண்டைகள், பிரச்சனைகள், போராட்டங்கள் நடந்து வருகின்றது. பிறஜாதிகளுக்குள்ளே உங்களால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. பவுல் அப்போஸ்தலன் முன்னே நான் துன்பப்படுத்துகிறவன், தூஷிக்கிறவன், கொடுமைப்படுத்துகிறவனா யிருந்தேன் ஆனால் இப்பொழுது தேவனிடத்தில் நான் இரக்கம் பெற்றேன் என்று சொல்லுகிறார்.

இன்றைக்கு இயேசு உங்களுக்குள் வர வேண்டுமென்றால், ஒரு வெளிச்சம் உங்களுக்குள் உதயமாக வேண்டும் என்றால் நீங்களும் இந்த இரக்கத்தை பெற்றிருக்க வேண்டும். நம்முடைய தேவன் மனதுருக்கத்தின் தேவன். இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவர். பணக்கார வாலிபன் இயேசுவின் இடத்தில் வந்து நித்திய ஜீவனைப் பெற நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். ஐயா இந்த உலகம் முழுவதும் எனக்கு சொந்தம், என் பேரில் எத்தனையோ தொழிற்சாலைகள் இருக்கிறது, எத்தனையோ வேலைகாரர்களுக்கு நான் சம்பளம் கொடுக்கிறேன். ஆனால் எனக்குள் சமாதானம் இல்லை, நான் நித்திய ஜீவனைப் பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். லூக்கா 18:22-ல் நாம் வாசித்துப் பார்த்தோம் என்றால் அங்கு இயேசு அந்த வாலிபனை பார்த்து, உனக்குள்ளதெல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு என்று சொல்லுகிறார்.

இன்றைக்கு நாம் நமக்கென்று ஒரு சபையை உருவாக்கிக் கொண்டு, ஒரு ஊழியத்தை ஏற்படுத்திக் கொண்டு அதில் உறுதியாக நின்று கொண்டிருக்கிறோம். ஆபிரகாமை தேவன் அழைத்து, இந்த தேசத்தை விட்டு புறப்பட்டு போ என்றார். அவன் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து சென்றபோது அவனை ஆண்டவர் வெளிச்சமாக (ஒளியாக) மாற்றினார். இன்றைக்கு நாம் ஏன்? வெளிச்சமாக மாற, பிரகாசிக்க முடியவில்லை. ஏனென்றால் நமக்கென்று ஒரு செட்டப் பண்ணிக் கொண்டோம். சிலர் ஆண்டவருக்காக எல்லாவற்றையும் குப்பையும் நஷ்டமுமாக எண்ணுகிறார்கள். பவுல் அப்போஸ்தலன் தான் ஒரு ரோமன் என்று சொல்லுகிறார். ஒரு ரோமன் என்று அந்த காலத்தில் பட்டம் வாங்க வேண்டும் என்றால், ரோமன் என்ற குடியுரிமை பெற வேண்டும் என்றாலும் குறைந்தது 250 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் அவருக்கு இருக்க வேண்டும். அந்த சொத்தை வைத்து தான் அவர் தன்னை ரோமன் என்று சொல்லுகிறார். இப்படிப்பட்ட அந்தஸ்துள்ள வாழ்க்கை வாழ்ந்த போது தான் தமஸ்குவில் தேவன் தன்னை சந்தித்தவுடன் எல்லாவற்றையும் குப்பையும் நஷ்டமுமாக எண்ணி தூக்கி எறிந்தார். மூன்று வருஷமும் ஆறு மாதமும் அரபி தேசத்தில் போய் தேவனோடு தனித்து ஜெபம் பண்ணினார். அவருடைய ஜெபத்தை கேட்டு தேவன் அவரை மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துச் சென்றார். ஆனால் அவருடன் தமஸ்கு சென்ற ஒருவருக்கும் அந்த வெளிச்சம் உதிக்கவில்லை அவர்களுக்குள் இருள் தான் இருந்தது. ஆனால் சவுல் பவுல் ஆக மாறின போது அவர்கள் எல்லாருக்கும் இந்த ஒளி, வெளிச்சம் பவுல் மூலமாக அவர்களுக்குள் கடந்து சென்றது.இந்நாட்களில் நம் மேல் கர்த்தருடைய ஒளி, வெளிச்சம் உதயமாக வேண்டும். இந்த ஒளியை நாம் மற்றவர்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். அவர்களையும் ஒளியின் பிள்ளைகளாய் மாற்ற வேண்டும். இன்றைக்கு இந்த நாட்களில் உங்களுக்குள்.உங்கள் சிந்தையில் அந்த வெளிச்சம் தோன்ற வேண்டும். பலரை நல்வழிப்படுத்துகிறவர்கள், ஜெபிக்கிறவர்கள் உபவாசிக்கிறவர்கள், ஊழியம் செய்கிறவர்கள்,

கர்த்தருக்காக ஓடுகிறவர்கள் எந்த பிரதி பலனையும் எதிர்பார்க்காமல் இருக்கிறவர்கள். நட்சத்திரங்களைப் போல பிரகாசிக்கிறவர்களாக இருக்கிறார்கள். நாம் பெற்ற ஒளி, நமக்குள் இருக்கிற ஒளி இருளாய் போகாதபடிக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உங்களில் இருக்கிற ஒளி இருளாய் போகாதபடிக்கு எண்ணெய் உற்றப்பட வேண்டும் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் உங்கள் மேல் ஊற்றப்பட வேண்டும்.

பவுல் அப்போஸ்தலனுக்குள் வெளிச்சம் வந்தது. அவன் பிரகாசிக்க ஆரம்பித்தான். அதற்குக் கர்த்தர்: நீ போ, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்று அப் 9:15,16-ல் அன்றைக்கே ஆண்டவர் பவுல் அப்போஸ்தலனுக்கு ஒரு ப்ளு பிரிண்ட் கொடுத்து, எங்கே ஊழியம் செய்யனும், எப்படி செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டார். என்ன பாடுகள் வரும், என்ன உபத்திரவம் வரும், நீ எனக்காக எல்லாவற்றையும் சகிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார். நீ எனக்காக சூரியனைப் போல பிரகாசிப்பாய் என்றார். ரோம குடியுரிமை வாங்கி ஒரு ஜமீன்தாராக இருந்த பவுல் இப்பொழுது கர்த்தருடைய பொக்கிஷமாக மாறிவிட்டார். நாம் ஆண்டவருடைய பிள்ளையாக மாறிவிட்டோமானால் பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது என்று சொல்லப்பட்ட அந்த வார்த்தையின்படி அதை அவர் நம்முடையதாக மாற்றி தந்து விடுவார். நீங்கள் தேவனுக்கு முன்பாக உங்களை தாழ்த்தும்போது அவருடைய வெளிச்சம் உங்களுக்குள் உதிக்கும். நீங்கள் பொக்கிஷமாக மாறுவீர்கள்.

## நீங்கள் அவருடைய பொக்கிஷமாக மாறுவீர்கள்

நீங்கள் ஒன்றுமில்லாதவர்களாய் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் கர்த்தர் அவருடைய பொக்கிஷமாக உங்களை மாற்றப் போகிறார். கர்த்தருடைய பெட்டகமாக, ஒரு பாக்குமெண்டாக நீங்கள் மாறப் போகிறீர்கள். இயேசு மரிக்கும்போது ஐசுவரியவானாக இருந்தார். அது என்ன ஐசுவரியம் என்றால் கிருபையின் ஐசுவரியம், மகிமையின் ஐசுவரியம். ஆனால் இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் நரிகளுக்கு குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடம் இல்லை என்று சொன்னார். அன்றைக்கு சாஸ்திரிகள் பொக்கிஷங்களை திறந்து இயேசுவுக்கு முன்பாக வைத்தார்கள். இன்றைக்கு பொக்கிஷம் என்பது நீங்கள்தான். நீங்கள் கர்த்தருடைய பொக்கிஷமாக, பெட்டகமாக, பேங்க் லாக்கராக இருக்கிறீர்கள். ஏசாயா 53:12-ல் அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார். நம்முடைய பாவத்துக்காக, அக்கிரமத்துக்காக தாமே தண்டனையை சுமந்த தேவன். இதோ என் மகன், மகள் வந்து விட்டான்(ள்). இதுவரைக்கும் பாவியாக, துன்மார்க்கனாக, தூசிக்கிறவனாக இருந்தான். இப்பொழுது தான் செய்தது பாவம் என்று ஒத்துக் கொண்டு மனம் திரும்பி வந்து விட்டான். அவன்(ள்) ஒன்றையும் எனக்கு மறைக்கவில்லை, பாவங்களையெல்லாம் அறிக்கை செய்து விட்டு விட்டான் என்று அக்கிரமக்காரர்களுக்காக வேண்டிக்கொண்டு அக்கிரமங்களை எல்லாம் தாமே சுமந்ததினாலே அநேகரை அவருக்குப் பங்காக கொடுப்பேன்.பலவான்களை அவருக்கு கொள்ளைப் பொருளாக பங்கிட்டுக் கொள்வார் என்று வேதம் சொல்லுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இன்றைக்கு நம்மை பலவான்களாக மாற்றி இருக்கின்றது. ஏசாயா 45:3,4-ல் உன்னைப் பெயர்சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே என்று நீ அறியும்படிக்கு, வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும்,

ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன். நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன் என்று சொல்லப்பட்ட வார்த்தையின்படி உங்களுடைய கண்களுக்கு தெரியாத, பிசாசு உங்களுக்கு வர வேண்டிய நன்மைகளை மறைத்து வைத்திருந்த, ஏமாற்றி கொள்ளை யடித்து பறித்து வைத்திருந்த எல்லாவற்றையும் தேவன் திரும்பத் தருவேன் என்று சொல்லுகிறார். உங்களுக்கு வரவேண்டிய நன்மைகள் அனைத்தையும் அவன் பறித்து வைத்துக் கொண்டு உங்களை கஷ்டத்திலும், கடனிலும், வியாதியிலும் கஷ்டப்படுங்கள் என்று வைத்திருக் கிறான். அவன் திருடி வைத்திருக்கின்ற அத்தனை ஆசீர்வாதங்களையும் தேவன் உங்களுக்கு தருவார். ஆண்டவர் அந்தகாரத்தில் இருக்கின்ற பொக்கிஷங்களை இன்றைக்கு உங்களுக்கு தந்து, உங்களை மேன்மைப்படுத்தப் போகிறார்.


உங்களுடைய வாழ்வில் இருக்கும் தரித்திரங்கள், பற்றாக்குறைகள் எல்லாம் நீங்கும். வேதத்தில் **நீதி 15:6-ல் நீதிமானுடைய வீட்டில் அதிக பொக்கிஷம் உண்டு என்று சொல்லப்** பட்டுள்ளது. ஆபிரகாம் வாழ்க்கைப் பாருங்கள். லோத்து ஆபிரகாமை விட்டு பிரிந்து செல்லும்போது ஆபிரகாம் சொல்லுகிறார் நீ வலது பக்கம் போனால், நான் இடது பக்கம் போகிறேன், நீ இடது பக்கம் போனால் நான் வலது பக்கம் போகிறேன் என்று. லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து சோதோம் கொமோரா பட்டணம் செழிப்பாகவும், பசுமையாகவும் இருக்கிறதை கண்டு சோதோமை தெரிந்தெடுத்து சென்றான். அவனுடைய பொக்கிஷமாக அவன் அதை தெரிந்தெடுத்தான். முடிவில் அந்த பட்டணம் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் எரிக்கப்பட்டது. அவன் மனைவி உப்பு தூணாக மாறினாள். பிள்ளைகளின் வாழ்க்கை தாறுமாறாக மாறினது. ஆனால் ஆபிரகாம் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து சென்றார், கர்த்தர் அவனை ஆசீர்வதிக்க வேண்டும் என்று அவன் விரும்பினான். நீங்களும் கர்த்தருடைய விருப்பத்தை அறிந்து செயல்படுவீர்களானால் உங்களுடைய வீட்டிலும் அதிகமான பொக்கிஷங்கள் இருக்கும். வேலையில்லாமல் அலைகின்ற நீங்கள் அநேகருக்கு வேலை கொடுக்கக்கூடியவர்களாய் மாறுவீர்கள். யோசேப்பு வாழ்க்கையை பாருங்கள் காணாமல் போன, தொலைந்து போன, கேட்பாரற்று கண்டுபிடிக்க முடியாத நிலையில், கைதியாக, அடிமையாக வாழ்ந்த அவனை தேவன் எகிப்து தேசத்திற்கு ஒரு பொக்கிஷமாக மாற்றினார். மோசேயின் வாழ்க்கையைப் பாருங்கள் எகிப்து தேசத்தில் உள்ள அனைத்து மேன்மையையும், அநித்தியமான பாவசந்தோஷங்களை அனுபவிப்பதை பார்க்கிலும், தேவனுடைய பிள்ளைகளோடு இருப்பதையே தெரிந்து கொண்டார். இனி வரும் காலங்கள் உங்கள் வாழ்க்கையிலும் மேன்மையாக இருக்க போகின்றது. ஆண்டவர் உங்களைப் அவருடைய பொக்கிஷமாக வைத்திருக்கிறார். உங்கள் எதிரிகள் ஒருவரும் உங்களை மேற்கொள்ளாதபடிக்கு பேச்சில் வல்லமையும், ஞானத்தையும் உங்களுக்கு தருவேன் என்று சொல்லுகிறார். தேவனுடைய ஞானத்தை ஒருவராலும் எதிர்த்து நிற்க முடியாது. இன்றைக்கு கர்த்தர் உங்களை ஞானத்தின் ஆவியினால் நிரப்புவார்.

**ஏசாயா 33:6-ம் வசனத்தில் பூரணரட்சிப்பும் ஞானமும் அறிவும் உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும்; கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம்** என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த பொக்கிஷங்களை இயேசு உங்களுக்கு தர வேண்டும் என்றால் நீங்கள் அவரை நோக்கி கூப்பிட வேண்டும். ஆண்டவர் நம்மை பொக்கிஷமாக, மகிமையாக மாற்றி இருக்கும்போது நாம் வீணானவைகளுக்கு மகிமையை கொடுக்கக் கூடாது. இன்றைக்கு நமக்குள் ஜெபமாகிய பொக்கிஷம், விசுவாசம் என்ற பொக்கிஷம் இருக்க வேண்டும். யோபுவின் வாழ்க்கையை பாருங்கள் தேவனிடத்தில் நன்மையை பெற்ற நாம் தீமையே பெற வேண்டாமோ என்று யோபு தன் மனைவியிடம் சொல்லுகிறார். அவருடைய விசுவாசத்தை பாருங்கள். தகப்பன் சிட்சியாத புத்திரர் உண்டோ, அவர் யாரை சிட்சிக்கிறாரோ

அவர்களிடத்தில் அவர் அன்பு கூறுகிறார். நாம் நம்மை சரி செய்ய உபவாசித்து ஜெபிக்க வேண்டும்.ஆனால் இன்று ஒரு சிலர் இருக்கிறார்கள் நான் உபவாசித்து ஜெபிக்க மாட்டேன். ஆனால் நான் விரும்புகிறது. நான் கேட்பது எல்லாம் தேவன் எனக்கு தர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர் என்னை சோதித்த பின்பு நான் பொன்னாக விளங்குவேன் என்று யோபு சொல்லுகிறார். மத் 6:21-ல் உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. நம்முடைய இருதயம் இயேசுவை நாடி இருக்க வேண்டும்.
2 கொரிந்தியர் 4:7-ல் இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். இந்த மகிமையை, மேன்மையை, பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். மண்ணுக்குள் ஒரு பொன் இருக்கிறது. அவர்தான் இயேசு. அவர்தான் இரட்சகர்.

பாடுகள் மத்தியிலும் யோபு என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்று கர்த்தரை துதித்தான். கர்த்தர் அவனை உத்தமனாக விளங்கப் பண்ணினார். ஜீவகிரீடத்தை அவனுக்கு கொடுத்தார். அந்த ஆண்டவர் இன்றைக்கு உங்களையும் கிரீடமாக, பொன்னாக பொக்கிஷமாக மாற்றுகிறார். இதோ வாசற்படியில் நின்று கதவை தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தை கேட்டு கதவைத் திறந்தால் நான் அவனுடன் போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடு போஜனம் பண்ணுவான். அவனுக்கு பரலோக மன்னாவை புசிக்க கொடுப்பேன். என்னுடைய காரியங்களை அவனுக்கு வெளிப்படுத்துவேன் என்றவர் இன்றைக்கு உங்களை பொக்கிஷமாக மாற்றப் போகிறார், மாற நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது என்று கொலோ 2:3-ல் கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது. உங்களை பொக்கிஷமாக மாற்றத்தான் இயேசு பரலோகத்தில் இருந்து இந்த பூமிக்கு இறங்கி வந்தார். ஐசுவரியவானாக இருந்த அவர் உங்களுக்காக தரித்திரர் ஆனார். உங்களை உயர்த்த அவர் எளிமையானவரானார். அவருடைய தரித்திரத்தினால் நீங்கள் இன்றைக்கு ஐசுவரியவான்களாகுகிறீர்கள். நீங்கள் உயர்த்தப்படுகிறீர்கள். உங்களது வறுமை, தரித்திரம், பலவீனம், பற்றாக்குறைகள் எல்லாம் மாறுகின்றது. உபாகமம் 28:12-ல் ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய். பொக்கிஷம் சாலையை கர்த்தர் உங்களுக்காக திறந்து, உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவார். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களை இந்த உலகத்திற்கு ஒளியாகவும், தம்முடைய பொக்கிஷமாகவும் வைத்து ஆசீர்வதித்து நடத்துவாராக.





பெண்கள் பகுதி

# வாழ்ந்து சுகமாயிரு

சகோதரி.
கலா வின்சென்ட்ராஜ்

பிரியமானவனே(ளே), உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். 3 யோவான் 1:2 ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

இன்றைக்கு நாம் எல்லோரும் வாழ்ந்து சுகமாயிருக்க, நலமாயிருக்கத்தான் விரும்புகிறோம். ஆனால் எதிர்பாராத பிரச்சனைகள், பாடுகள், வேதனைகள், பற்றாக் குறைகள், இழப்புகள் நம்முடைய வாழ்க்கையை சின்னாபின்னமாக்கும் போது மனம் கலங்குகிறோம் எங்கு போவேன்? யார் என்னை தேற்றுவார்? யார் இந்த துன்பத்தில் எனக்கு கைகொடுத்து தூக்கமுடியும் என்று கண்ணீர் சிந்துகிறோம்.

**இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி, எகிப்து தேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும், இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம் என்று எண் 14:2-ல் புலம்பினார்கள்.** காரணம் அவர்கள் கேட்ட துர்ச்செய்தி தான். இதுவரை தேவனை விசுவாசித்த அவர்கள் சூழ்நிலையைப் பார்த்து மனம் சோர்ந்து போய் அழுதார்கள். இப்படித்தான் நீங்களும் கூட போராட்டம் வரும்போது, துர்ச்செய்திகளை கேட்டு, விசுவாசத்தில் தடுமாறும் போது நான் சாகட்டும், நான் வாழ்ந்து என்ன பிரயோஜனம், நான் செய்த நன்மைக்கு எனக்கு தீமை செய்கிறார்களே! என் உள்ளம் உடையும்படி, புண்படும்படி பேசி விட்டார்களே! என்று புலம்புகிறீர்களா? மனம் கலங்காதிருங்கள். உலகம் உங்களை கைவிடும்போது நான் சாவதுதான் நல்லது என்று நீங்கள் புலம்பினாலும் ஆண்டவர் இயேசு என் மகனே! என் மகளே! நீ வாழ்ந்து சுகமாயிரு! நலமாயிரு! என்று சொல்லுகிறார். நாம் நலமாய் வாழ்வதற்கு சில வழிகளைப் பார்ப்போம்!

## கைகளை விரித்தால் நலமாயிருக்கும்

**நீர் உம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தி உம்முடைய கைகளை அவருக்கு நேராக விரித்தால் நலமாயிருக்கும். யோபு 11:13 அப்பொழுது உம்முடைய ஆயுசுகாலம் பட்டப் பகலைப் பார்க்கிலும் பிரகாசமாயிருக்கும்; இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப்போலிருப்பீர். யோபு 11:17-ல் வசனம் சொல்கிறது.**

சில வருடங்களுக்கு முன்பு ஒரு சகோதரியை சந்தித்தேன். அவர்கள் சொன்ன வார்த்தை எனக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. அவர்கள் மகனை பாம்பு கடித்து விட்டது. விஷம் கடுமையாக ஏறிக் கொண்டிருக்கிறது. மகன் சுழன்று போனானாம்.



வாயில் நுரைதள்ள ஆரம்பித்துவிட்டது. மகனை ஒரு வண்டியில் ஏற்றி அரசு மருத்துவமனையில் சேர்த்துவிட்டு, இந்த சகோதரி ஒவ்வொரு டாக்டரிடமும் கையை விரித்து, காலில் விழுந்து ஐயா! என் மகன் பிழைத்துக் கொள்வானா? ஐயா! என் மகனைக் காப்பாற்றுங்கள்! என்று கதறிக்கொண்டே இருந்தார்களாம். ஆனால் அந்த சகோதரியின் மகன் கையினால் சைகை செய்து மேலே கையைக் காட்டி ஆண்டவரிடம், இயேசுவிடம் கையை விரித்து கூப்பிடுங்கள்! என்றானாம். நம்பிக்கையில் தளர்ந்து போயிருந்த அந்த சகோதரி இயேசுவே! என் மகனைக் காப்பாற்றும்! என்று கூப்பிடத் தொடங்கினார்கள். மருத்துவர்களும் அந்த மகனுக்கு வேண்டிய சிகிச்சையை செய்யத் தொடங்கினார்கள். ஆச்சரியமாய் அவன் பிழைத்துக் கொண்டான். இன்றும் உயிர் வாழ்கிறான். எத்தனை சந்தோஷம்!

இன்று நம் வாழ்வில் வரும் போராட்டங்கள் நடுவில் மனம் தளர்ந்து போய் யாரை நோக்கி ஓடுகிறோம்? யாரை நோக்கி நம்முடைய கைகளை விரிக்கிறோம்? யோபுவின் நண்பர்கள் யோபுவுக்கு இந்த ஆலோசனை கொடுத்தார்கள். யோபு 11:13,14-ல் நீர் உம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தி, ஏதாவது தவறு செய்திருந்தால் அதை எல்லாம் விட்டுவிட்டு, அக்கிரமத்தை அநியாயத்தை உன் வீட்டை விட்டு அகற்றி, உன் கைகளை ஆண்டவருக்கு நேராக விரித்தால் நலமா யிருக்கும். அப்பொழுது உன் ஆயுசு பட்டப் பகலைப் போல் இருக்கும், இப்பொழுது இருளடைந்திருக்கிற நீர் விடியற்காலத்தைப் போல் இருப்பீர் என்றார்கள். அதேபோல் யோபுவின் ஆயுசு காலம் பெருகினது. இருளடைந்து, எல்லாம் இழந்த நிலையில் யாருமற்றவனாய் இருந்த வாழ்வில் வெளிச்சம் தோன்றியது. இழந்த எல்லாம் பெற்றுக் கொண்டான். சந்தோஷமும், மகிழ்ச்சியும் அவனுடைய வாழ்வில் திரும்பக் கிடைத்தது. அதேபோல் எல்லாம் இழந்து நிற்கிறீர்களா? எங்கும் இருளாய் தெரிகிறதா? விரக்தியாய் எனக்கு இந்த உலகத்தில் என்ன இருக்கிறது என்று வாழ்கிறீர்களா? மனம் கலங்காதிருங்கள். உங்களை நேசிக்க ஒருவர் இருக்கிறார்? உங்கள் கண்ணீரை துடைத்து, உங்கள் இருளை வெளிச்சமாக்க ஒருவர் இருக்கிறார் அவர் இயேசு. அவரை நோக்கி உங்கள் கைகளை விரித்து ஜெபியுங்கள். இயேசுவே! நீர்தான் எனக்கு இரங்குகிறவர். என்னைக் காப்பாற்றும், தூக்கிவிடும் என்று ஜெபித்துப் பாருங்கள் உங்கள் வாழ்வு நலமாயிருக்கும். நீங்கள் பிழைப்பீர்கள்.

## கற்பனைகளை கவனித்தால் நலமாயிருக்கும்

ஆ! என் கற்பனைகளைக் கவனித் தாயானால் நலமாயிருக்கும், அப்பொழுது உன் சமாதானம் நதியைப் போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும். ஏசா 48:18



நாம் நலமாயிருப்பதற்கு ஆண்டவரின் வார்த்தைகளை கவனிக்க வேண்டும். சிலர் பேசுகிறதை கவனித்துக் கேட்கவே மாட்டார்கள். பின்பு அந்த விஷயத்தைக் குறித்து கேள்விப்படும்போது நான் சரியாய் கவனிக்கவில்லையே என்பார்கள். பிள்ளைகள் பள்ளியில் ஆசிரியர் நடத்துவதை கவனிக்காதிருந்தால் படிப்பில் மதிப்பெண்களை இழந்து வேதனையோடு வாழ்கிறார்கள். கவனக்குறைவினால் எத்தனையோ நஷ்டங்கள் வருகிறது. சமாதானத்தையே இழந்து போக நேரிடுகிறது. ஒருமுறை சிவகாசியில் ராக்லேண்ட் என்ற துரை மிஷனரியாக வெளிநாட்டிலிருந்து வந்திருந்து ஊழியம் செய்து வரும்போது, அவருக்கு ஒரு உதவியாளர் இருந்தார். அவர் எதைச் சொன்னாலும் சரியாய் கவனிக்கவே மாட்டார்.

அங்கு உள்ள ஆற்றில் குளிக்க துரை இறங்கின உடனே அந்த மனிதரைப் பார்த்து 'துவாலை' கொண்டு வா என்றார். துவாலை என்றால் டவல் என்பதாகும். இவர் வெகுநேரம் கழித்து மூச்சிரைக்க ஓடி வந்தார். கையில் ஒரு டப்பாவை வைத்திருந்தார். துரை அவரைப் பார்த்து எங்க போனாய்? எவ்வளவு நேரம் குளித்துவிட்டு நான் காத்திருக்கிறேன். பக்கத்தில் இருக்கிற துவாலையை உன்னால் எடுத்து வர முடியாதா என்றார். உடனே அவர் ஐயா துவாலையா சொன்னீர்கள்? நான் சரியாக கவனிக்கவில்லை. என் காதில் தவளை என்று கேட்டது நான் வெகுதூரம் ஓடிப்போய் ஆற்றங்கரையில் இந்த தவளையைப் பிடித்து வந்தேன் என்றார். நன்றாய் வாங்கிக் கட்டிக் கொண்டார்.

நம் வாழ்வில் கவனக்குறைவினால் சிறிய, பெரிய பாதிப்புகளில் நாம் கடந்து போய் விடுகிறோம். இதினிமித்தம் நிம்மதியை இழக்கிறோம். நம்முடைய சமாதானம் பறிக்கப் படுகிறது. குடும்பங்களில் பிரச்சனை, அலுவலகத் தில் பிரச்சனை, வேலையில் பிரச்சனை, சரீரத்தை கவனிக்காததினால் அதிலும் பிரச்சனை மொத்தத் தில் சமாதானம் இல்லாமல் துக்கத்தோடு அலைகிறோம். அதனால் தான் ஏசா 48:18-ல் வேதம் சொல்கிறது நீ என் கற்பனைகளை கவனித்தால் நலமாயிருக்கும் அப்பொழுது உன் சமாதானம் நதியைப் போலிருக்கும். எந்த சூழ்நிலையாக இருந்தாலும், அந்த சூழ்நிலையில் ஆண்டவருடைய வார்த்தை எனக்கு என்ன சொல்லுகிறது என்று வேதத்தை திறந்து வாசியுங்கள். அவர் அதில் பேசுகிறதைக் கவனியுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்வு நலமாயிருக்கும்.

## என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்

ஆ, என் ஜனம் எனக்குச் செவி கொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன். சங் 81:13,14 இன்றைக்கு பல்வேறு பிரச்சனைகள் மத்தியில் ஒருவருக்கு ஒருவர் விரோதமாய்



யுத்தம் செய்து, சண்டை பண்ணி விரோதமாய் செயல்படுகிறதை நாம் பார்க்கிறோம். தெய்வப் பயமற்ற மக்கள் மற்றவர்களுக்கு விரோதமாய் மந்திரங்கள், பில்லிசூன்யம், ஏவல் செய்வினைகளை செய்து தங்கள் எதிர்ப்பை காட்டுகிறார்கள். ஒருவரை ஒருவர் தாக்கி கொலை செய்து விடுகிறார்கள். இனி உன் வீட்டிற்கு நான் வருவதில்லை. என் வீட்டிற்கும் நீ வரத்தேவையில்லை என்கிறார்கள். சண்டை சச்சரவுகளினால் குடும்பங்களில் நிம்மதியில்லை. பிரிவினைகள், கசப்புகள், வைராக்கியங்கள் உள்ளத்தில் எழும்பி வேதனையோடே மனிதர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்துத்தான் ஆண்டவர் சொல்கிறார். நீ! என் ஜனம், எனக்கு செவிகொடுத்து என் வழியில் நடந்தால் நலமாயிருக்கும். நான் அவர்களை, எதிராளிகளை பார்த்துக் கொள்வேன் என்று சொல்கிறார். ஆனால் நாம் என்ன செய்கிறோம். நான் அவர்களை ஒரு கை பார்த்து விடுகிறேன் என்று யுத்தம் செய்கிறோம். நீயா? நானா? பார்க்கலாம் என்று அவர்களுக்கு எதிராய் செயல் படுகிறோமா?

ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார். என்று வேதம் சொல்கிறது. நீதி 16:7 இன்று நம்முடைய வழிகள் எப்படி இருக்கிறது. நாம் ஆண்டவருக்கு செவி கொடுத்து அவர் வழிகளில் நடக்கிறோமா? நம்மை ஆராய்ந்து பார்த்து தேவனிடம் திரும்புவோம். அப்போது அவர் நமக்கு எதிராய் செயல்படுகிறவைகளை தாழ்த்திப் போடுவார். ஆண்டவர் பிரியமானவனே(ளே)! உன் ஆத்துமா வாழ்வதுபோல் நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு! என்று சொன்னார். இன்று நாம் சுகமாயிருக்கும் வழிகளை வேதவசனத்தோடு அறிந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். என் ஆண்டவர் தாமே ஒவ்வொருவரும் அவரை நோக்கி கைகளை விரித்து ஜெபிக்கவும், அவர் வசனங்களை கவனிக்கவும், அவர் வழிகளில் நடக்கவும் உதவி செய்வாராக!

# உங்களை வெற்றி சிறக்கப் பண்ணுகிறவர்



சகோதரி. பிரேமாடேவிட்

"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களி லேயும், எங்களை கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். 2 கொரிந்தியர் 2:14 கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, சிலுவையில் வெற்றி சிறந்தவராகிய ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். 11-ஆம் வகுப்பு படிக்கும் மாணவனிடம், ஆசிரியர் ABCD சொல்லு என கேட்டவுடன் அவன் சொல்லத் தொடங்கினான். KL அதற்கு மேல் சொல்லத் தெரியவில்லை. அந்தளவுக்கு அவன் படிப்பிலே Weak, எல்லாராலும் 'மக்கு' என்றும் கேலி கிண்டல் செய்யப்பட்டான். Students ஐ High, medium என அவர்கள் எடுக்கும் Mark-ஐ வைத்து Group பிரித்து படிக்க வைப்பார்கள். இவனோ இது எல்லாவற்றிலும் அடிமட்டத்திலிருந் தான். இவன் படித்ததோ ஒரு கான்வென்ட் பள்ளி. பெற்றோர் நல்லாதான் படிக்க வைக்கிறாங்க. டீச்சர் எப்படியாவது பாஸாக்கி விடவேண்டும் என அதிகமா முயற்சி எடுத்தார்கள். படிப்புன்னு நெனச்சாலே அவனுக்கு பயமா இருந்துச்சு. படிப்பு அவனுக்கு ஏறவேயில்லை. அப்பத்தான் அவனுடைய Friend அவனுக்கு ஒரு (துர்) ஆலோசனை சொல்கிறான். படிக்காத எத்தனையோ பேரு முன்னேற்றத்திற்கு வந்துருக்காங்க காமராஜரைப் பாரு. அவர் முதலமைச்சர் ஆனாரே. நீயும் படிக்காமல் முன்னேற லாம். நீ நூறு ரூபாய் உங்க வீட்டில திருடிட்டு வா. எங்க மாமா கோயம்பேடு மார்க்கெட்டில் இருந்து அடிக்கடி நாமக்கல் போவார் அவருக்கு 20, 30 கொடுத்தேனா அவர் உன்னை கடையில் சேர்த்து விடுவார்.தினமும் 50 ரூபாய் கிடைக்கும். கொஞ்சம் கொஞ்சமாக முன்னுக்கு வந்துவிடலாம் என்றான். படிப்பிலே தோல்வியான எண்ணங்களோடு இருந்த அவனுக்கு நல்லதாகத் தோன்றியது. இதுவரை திருட்டுப் பழக்கம் இவனுக்கு இருந்ததில்லை.ஆனால் அன்று அப்பா அம்மாவுக்குத் தெரியாமல் ATM கார்டு மூலம் 100 ரூபாய் எடுத்து வீட்டை விட்டு ஓடி போகிற முடிவுக்கு வந்து விட்டான். நாளைக்கு காலையில் ஓடிப்போகணும்-னு Plan பண்ணியிருக் கும்போது ஒரு சகோதரன் இவனை சூளைமேட்டிலே ஒரு Youth Meeting-நல்லா இருக்கும் வந்து Attend பண்ண முடியுமா என்றார்கள். இதுவரைக்கும் எந்த கிறிஸ்துவக் கூட்டங்களுக்கும் போயிராத அந்த மாணவன் நாளைக்கு நம்ம ஓடிப்போகப் போறோம் சரி போயிட்டு வருவோம் என நினைத்தான். அங்கே போக வேண்டும் என்ற உணர்வு உந்தித் தள்ளினது. Prayer முடிந்தவுடன் அங்குவந்த தேவஊழியர் வாலிபர் கள் தலையில் கை வைத்து ஜெபித்தார். இவன் தலை யில் கை வைத்து ஜெபித்தபோது கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலா வாய் ஆண்டவர் உன்னை Double Degree படிக்க வைக்கப் போகிறார். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் என்றார். இந்த வார்த்தைகள் அவனை உற்சாகப்படுத் தினது அதோடு ஓடிப்போகிறதை விட்டுட்டு மறுநாள் School-க்குப் போனான்.அதைத் தொடர்ந்து சபைக்குப் போக ஆரம்பித்தான்.

ஆலயத்திலுள்ள சின்ன சின்ன வேலைகளை ஆர்வமாய் செய்து வந்தான். அப்பொழுது Church-க்கு இங்கிலாந்தில் இருந்து வந்த ஒரு ஊழியக்காரம்மா இந்த தம்பியை பார்த்து கர்த்தர் ஊழியத்திற்கு உன்னை அழைக்கிறார் என்றார்கள். பின்பு, அந்த ஊழியக்காரம்மா இங்கிலாந்து சென்று 6 மாதம் கழித்து மீண்டும் லக்ஷ்மிகாந்த் படிக்கும் பள்ளிக்கு Special Guest ஆக அழைக்கப்பட்டிருந்தார்கள். ஒரே Uniform-ல 5000 பேர், ஒரே ஆடிட்டோரியத்தில் அமர்ந்திருக்கும் போது அவர்கள் சில வார்த்தைகளை பேசி ஜெபித்தபோது அந்த அம்மா பிள்ளைகளுக்கு கீழேயிருக்கிற தம்பியைக் கூப்பிடுங்கனு சொன்னாங்க. இவன் ஓடினான். அந்த அம்மா இவனை Total -la மறந்து விட்டார்கள். அவனை நோக்கி இவன் இயேசப்பாவுக்கு பிடிச்ச பையன். அவருடைய ஊழியத்தை இவன் செய்வான் என்று எல்லார் முன்பாக அந்த அம்மா சொன்னார்கள். ABCD-யே இவனுக்கு தெரியாது மக்கு, ஒன்றுக்கும் லாயக்கு இல்லாதவன் என்று பேசப்பட்ட இடத்திலே Physics-176 மார்க் எடுத்து XIIth I Grade-ல் பாஸ் ஆனான். எல்லாரும் எப்படி இவன் மார்க் வாங்கினான் என்று ஆச்சரியப்படும்படி ஆண்டவர் செய்தார். இந்தியா விலேயே மிகச் சிறந்த கல்லூரியில் இன்ஜினியரிங் படித்து, மேற்படிப்பு இங்கிலாந்தில் முடித்து இன்றைக்கு மும்பையில் நத்தானியேல் லக்ஷ்மிகாந்த் ஊழியம் செய்து கொண்டிருக்கிறார். இந்த வாலிபனைப் போல எப்பொழுதும், எல்லா இடங்களிலேயும் கிறிஸ்துவுக்குள் நீங்களும் வெற்றி சிறப்பீர்களாக.

# ரீமஸின் ஜெபமும் – ஆசீர்வாதமும்

## ஹலோ குட்டீஸ் நல்லா இருக்கீங்களா?

ஒரு மலைக்கிராமத்தில் பல ஏழைக் குடும்பங்கள் இருந்தன. ஆடு, மாடு, கோழி வளர்த்து, அவரவர் நிலத்தை உழுது பயிரிட்டு வரும் வருமானத்தை வைத்து அவர்கள் வாழ்க்கையை ஓட்டினார்கள். அங்குள்ள குழந்தைகளுக்கு படிப்பு வசதி கிடையாது. ஒருத்தர், இரண்டு பேருக்கு மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்திருந்தது. இந்த கிராமத்தில் பக்தியுள்ள பெற்றோருக்கு ரீமஸ் என்னும் ஒரு பையன் இருந்தான். அவனுக்கு 8 வயதாயிருக்கும் போது தனக்கு எழுதப்படிக்கத் தெரியவில்லையே என்ற ஏக்கம் வந்தது. ஒரு நாள் அங்குள்ள கடைத் தெருவில் ஒருவர் செய்தித்தாளை வாசிப்பதை ரீமஸ் பார்த்தான். அவரிடம் அவன் மெல்லச் சென்று தனக்கு எழுதப்படிக்க கற்றுத் தரும்படி கேட்டான். அந்த மனிதரோ நான் உனக்குச் சொல்லித் தருகிறேன், ஆனால் அதற்குப் பதிலாக நீ என்னுடைய மாடுகளை கொஞ்ச நாட்கள் மேய்க்க வேண்டும் என்றார். அப்படியே ரீமஸ் காலையில் 3 மணி நேரம் மாடுகளை மேய்த்து விட்டு, வீட்டில் மதிய உணவு உண்டபின் வந்து, இருட்டும் வரை அந்த மனிதரிடம் படிப்பு கற்று வந்தான்.

பென்சிலோ, காகிதமோ இல்லாததால் பெரும்பாலும் மணல் தரையில் கைவிரலால் எழுதியே பழகி, எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டான். சொல்லிக் கொடுத்த அந்த மனிதர், அவனுக்கு ஒரு சிறு பென்சிலும், கசங்கிய காகிதத்துண்டு ஒன்றும் பரிசாக அளித்தார். மேலும் ஏழைப்பிள்ளைகள் பட்டணத்தில் படிக்க வசதி செய்து தரப்படும். அதற்கு மனு அனுப்பினால் வழி கிடைக்கும் என்று அந்த மனிதர் கூறியிருந்தார். அவர் கொடுத்த பரிசை ரீமஸ் பெட்டியில் பத்திரமாக வைத்து கொண்டான். ரீமஸின் தந்தை ஒரு நோயாளி, படுத்த படுக்கையாக இருந்தார். தாயாரோ மலைச் சரிவுகளில் வளரும் நாணல் செடிகளைப் பறித்து வந்து அதை சுத்தம் செய்து தொப்பிகளைச் செய்வார். அங்குள்ள ஒரு சிறு தொழிற்சாலைக்கு ஒரு லாரி பொருட்களை ஏற்றிக் கொண்டு வரும். அந்த லாரி டிரைவர் அவன் அம்மாவுக்கு பழக்கமானவர். எனவே அவர்கள் அந்த தொப்பிகளை அவரிடம் கொடுத்து விற்று வருமாறு சொல்வார்கள். அதில் கிடைக்கும் பணத்தை வைத்து வீட்டிற்கு வேண்டியவைகளை வாங்குவார்கள். ரீமஸோ அவர்களுடைய ஆடு, மாடு, கோழிகளை கவனித்து வந்தான். ஒருநாள் ரீமஸ்-க்கு திடீரென்று ஒரு யோசனை வந்தது. உடனே அவன் பெட்டியில் ஒளித்து வைத்திருந்த பேப்பரையும், பென்சிலையும் எடுத்து முழங்காற்படியிட்டு ஜெபித்தான். அவன் அம்மா அப்பா எதற்கெடுத்தாலும் ஜெபிப்பதை அவன் பார்த்திருந்தான். அதனால் மறுபடியும் ஊக்கமாக ஜெபித்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. பிறகு அந்த பேப்பரில் இப்படி எழுதினான். இதை கண்டெடுக்கிறவர்கள்







தயவுசெய்து ஏழைப் பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் என்னைச் சேர்க்க முயற்சி செய்யுங்கள். நான் ரொம்ப ஏழை. ஆனால் கடவுளை அதிகம் நேசிக்கிறேன். அவரிடம் கெஞ்சி கேட்டு விட்டுத்தான் இதை எழுதுகிறேன். ஸ்டாம்ப் வாங்க கூட காசு இல்லை. அதனால இந்த தொப்பிக்குள் வைக்கிறேன். எவர் கையிலாவது கிடைத்தால் தயவு செய்து உதவி செய்யும்படி தாழ்மையோடு கேட்கிறேன். இப்படிக்கு ஏழை ரீமஸ் என்று எழுதி அதை சட்டை பைக்குள் வைத்துக் கொண்டான்.

மறுநாள் அம்மா தொப்பி செய்து கொண்டிருந்த போது அம்மாவுக்கு தெரியமால் ஒரு தொப்பிக்குள் அதை வைத்து விட்டான். வழக்கம் போல லாரி டிரைவரிடம் தொப்பிகளைக் கொடுத்தனர். 2 வாரம் ரீமஸ் பதில் வருமா? வராதா என எதிர்பார்த்தான். பின்பு அதையே மறந்து விட்டான். 3 மாதம் கழித்து இவங்க வீட்டிற்கு முன் லாரி நின்றது. லாரி டிரைவர் ரீமஸிடம் ஒரு பெட்டியை நீட்டினார். அதோடு ஒரு கடிதத்தையும் கொடுத்தார். பிரியமுள்ள ரீமஸ்-க்கு உன் கடிதத்தை என் தொப்பிக்குள் பார்த்தேன். முகவரி இல்லாததால் தொப்பி விற்ற கடைக்குச் சென்று லாரி டிரைவர் மூலம் உன் இருப்பிடம் அறிந்தேன். நீ படிக்க நான் வசதி செய்கிறேன். இதோ சில துணிமணிகளை அனுப்புகிறேன். இதை அணிந்து கொண்டு லாரியில் ஏறி இங்கு வந்து சேர்வாய் என எதிர்பார்க்கும் வில்லியம்ஸ் என்று எழுதியிருந்தது. இதை வாசித்தவுடன் அம்மா அப்பாவிடம் காண்பித்தான். அவர்கள் ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்தார்கள். பக்தியுள்ள பெற்றோர் மகனின் நன்மைக்காக அவனை அந்த லாரி டிரைவருடன் அனுப்பி வைத்தார்கள். ரீமஸ் நன்றாக படித்து, நல்ல பெயரை எடுத்தான், ஆண்டவரின் வழியில் நடந்தான்.

ஆப்பிரிக்கா சென்ற மிஷனரிகளில் ரீமஸ் ஒருவர்.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா படிக்க வசதி இருந்தும் படிப்பில் நான் கவனம் செலுத்தாததை மன்னியுங்க. நான் தூக்கியெறியும் சிறு பென்சிலையும், கசங்கிய காகிதத் துண்டையும் கூட ஜெபம் பண்ணி பயன்படுத்திய ரீமஸைப் போல நானும் எனக்கு கிடைத்திருக்கும் பொருட்களை வீணாக்காமல், இல்லாதவற்றிற்காக முறுமுறுக்காமல் நன்கு படித்து தேவனே உமக்கும், பெற்றோருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்க உதவி செய்யுங்க ஆமென்.

## மனப்பாட வசனம்

திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் பண்ணாமல்
அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்.
சங் 102:16





சாட்சி பகுதி

# அன்பர் இயேசு செய்த நன்மைகளில் சில....



**சகோதரி. வீரலெட்சுமி - திண்டுக்கல்**

என் கணவர் வெளியூரில் வேலை செய்து வந்தார். கடந்த சில மாதங்களாக வீட்டிற்கு வராமல், பணமும் அனுப்பாமல் அவர் மனம் போல வாழ்ந்து கொண்டிருந்தார். இந்த நிலையில் நானும் என் பிள்ளைகளும் பொருளாதார நெருக்கடியில் மிகவும் கஷ்டப்பட்டோம். கண்ணீரோடு இருந்த சூழ்நிலையில் இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு எங்களின் சூழ்நிலை மாறவும், தேவைகள் சந்திக்கப்படவும், கணவர் மனந்திரும்பி வரவும் ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். தேவன் ஜெபத்திற்கு பதில் தந்து என் கணவரை வீட்டிற்கு வர வைத்தார். இப்பொழுது நாங்கள் குடும்பமாக இணைந்து சமாதானத்தோடும் மனநிறைவோடும் வாழ்கிறோம். இயேசப்பாவுக்கு நன்றி.

**சகோதரர். ராஜேஸ்குமார் - சென்னை**

நான் வெளி நாட்டிற்கு வேலைக்கு செல்வதிலும், அதற்கான டிக்கெட் வருவதிலும் பல தடைகள் இருந்தது. இந்நிலையில் நான் தினமும் கர்த்தாவே என்னை கை தூக்கி விடும் என்ற நேரலை நிகழ்ச்சியை பார்ப்பேன். அதில் எனக்காக, என் வேலைக்காக தடைகள் நீங்க ஜெபிக்குமாறு ஜெபகுறிப்பு அனுப்பினேன். தாங்கள் எனக்காக ஜெபித்தீர்கள். தேவன் தடைகளை உடைத்து வேலை கிடைக்கவும் டிக்கெட் வரவும் அநுக்கிரகம் செய்தார். தற்போது நான் வெளிநாட்டில் வேலை செய்கிறேன். தேவனுக்கே மகிமை.

**சகோதரி. சத்யா - திண்டுக்கல்**

நான் கடந்த 2013-ஆம் ஆண்டு வாழ்வின் கீதங்கள் ஒலிநாடாவில் வெளியிடப்பட்ட நான் ராஜாவைக் குறித்துப் பாடின கவியை கேளுங்கள் என்ற பாடலை கேட்டேன். இந்த பாடலின் மூலமாக தேவன் என்னைத் தொட்டார். அந்த பாடலின் வரிகள் என் உள்ளத்தில் ஆழமாக பதிந்தது. அந்த வார்த்தைகள் இன்று வரை எனக்குள் தொனிக்கச் செய்து அவருடைய ஆழமான அன்பை உணரவும், ருசிக்கவும் வைத்த தேவனுக்கு கோடான கோடி நன்றி.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY

: GPAY TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

## வாசகர்கள் கவனத்திற்கு!

இந்த வருடத்திற்கான உங்கள் சந்தாவை புதுப்பித்து தொடர்ந்து தடையில்லாமல் இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழை பெற்றுக் கொள்ள அன்பாய் கேட்டுக் கொள்கிறோம்.

**G pay Number**
**944 300 9333**

**மணியார்டர் முகவரி,**

இயேசுவை தினம் பார்க்கிறேன்
54, A.I.B.E.A நகர், A காலனி,
பரவை, மதுரை – 625402

நடப்பு செய்தி

# ஹெச்.எம்.பி.வி வைரஸ் தொற்று



சீனாவில் ஹெச்.எம்.பி.வி வைரஸ் தொற்று அதிகரித்து வருவதால், அண்டை நாடான இந்தியா விலும் கவலைகள் எழுந்துள்ளன. ஆனால், இது குறித்து கவலை கொள்ள எந்த ஒரு முகாந்திரமும் இல்லை. இதுபோன்ற சுவாச பாதிப்புகளை ஏற்படுத் தும் வைரஸ் தொற்று பொதுவானது தான். இதன் காரணமாக, சளி போன்ற நோய்கள் ஏற்படலாம். ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் வயதா னவர்களுக்கு இந்த நோய்த்தொற்றால் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருக்கலாம்.ஆனால் இதுதீவிர பாதிப்பு எதையும் ஏற்படுத்தாது. எனவே கவலை கொள்ளத் தேவையில்லை. குளிர்காலத்தில் சில நோய் பாதிப்புகள் அதிகம் இருப்பது வழக்கம் தான்.

## மருத்துவர்கள் கூறுவது என்ன?

ஏற்கெனவே ஆஸ்துமா மற்றும் க்ரானிக் அப்ஸ்ரக்டிவ் பல்மொனரி டிசீஸ் எனப்படும் நுரையீரல் நோய் பாதிப்பு கொண்ட நோயாளி களுக்கு சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம். அவர் களுக்கு இந்த ஹெச்.எம்.பி.வி வைரஸ் நோய் பாதிப்பு ஏற்படும்போது கூடுதல் சிக்கல்கள் இருக்கலாம். அவர்களுக்கு சுவாசிப்பதில் அதிக சிரமம், சோர்வு மற்றும் காய்ச்சல் இருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

## ஹெச்.எம்.பி.வி. வைரஸ் என்றால் என்ன?

இந்த வைரஸ் 200 முதல் 400 ஆண்டுகளுக்கு முன்பு பறவைகளில் தோன்றியது என்றும், அதன் பிறகு இந்த வைரஸ் சூழலுக்கேற்ப மீண்டும் மீண்டும் தன்னைத் தகவமைத்துக் கொண்டதாகவும் கடந்த 2001-ஆம் ஆண்டு மனிதர்கள் மத்தியில் இந்த வைரஸ் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது, அப்போதுதான் இந்த வைரஸ் மனிதர்களைத் தாக்கும் என்று கண்டறியப்பட்டது 'இந்த வைரஸ் அனைத்து வயதினரையும் தாக்கலாம் என்றும், இந்த வைரஸ் பொதுவாக மூன்று முதல் ஆறு நாட்கள் உயிருடன் இருக்கும். தொற்று எவ்வளவு கடுமையானது என்பதைப் பொறுத்து குறைந்த அல்லது அதிக நாட்களுக்கு நோய் பாதிப்பு இருக்கலாம்.

## எவ்வாறு பரவுகிறது?

இந்த வைரஸ் இருமல் மற்றும் தும்மலின்போது வெளியாகும் சளி துளிகள் மூலம் பரவி மக்களிடம் நோய் பாதிப்பை ஏற்படுத்துகிறது. கை குலுக்குவதன் மூலமோ, கட்டிப் பிடிப்பதன் மூலமோ அல்லது ஒருவருக்கொருவர் தொடுவதன் மூலமாகவோ இந்த வைரஸ் பரவலாம். இருமல் மற்றும் தும்மல் காரணமாக சளி துளிகள் ஓரிடத்தில் விழுந்து, அந்த இடத்தில் உங்கள் கைகளை வைத்த பிறகு, உங்கள் முகம், மூக்கு, கண்கள் அல்லது வாயைத் தொட்டால், இந்த வைரஸ் உங்களையும் பாதிக்கலாம்.

## மனதில் கொள்ள வேண்டியவை

இருமல் அல்லது தும்மல் வரும் போது கைக்குட்டை அல்லது துணியை வைத்து வாயை மூடிக்கொள்ள வேண்டும்.பிறகு கைகளை குறைந்தது 20 விநாடிகள் சோப் கொண்டு கழுவ வேண்டும்.

- உங்களுக்கு சளி இருந்தால், முகக்கவசம் அணிந்து கொள்ள வேண்டும். வீட்டில் இருந்தபடியே ஓய்வெடுக்க வேண்டும்.
- நீங்கள் பயன்படுத்திய பாத்திரங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து பயன்படுத்த வேண்டாம்.


7,8
பிப்ரவரி
9:30 AM - 2:00 PM
செம்பட்டியில்
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
இடம்:
வானத்தின் வாசல் எழுப்புதல்
ஜெபமையம்,
செம்பட்டி, திண்டுக்கல்.
தொடர்புக்கு : 94980 00449 , 94428 00449


பிப்ரவரி
15
சனிக்கிழமை
9:30 AM - 2:30 PM
மதுரையில்
எழுப்புதல்
உபவாச ஜெபம்
இடம்:
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்
PRC Depot அருகில், மதுரை
தொடர்புக்கு : 94980 00449, 94428 00449

# SCHOOL OF EVANGELISM

## நீங்கள் சுவிசேஷகராக விருப்பமா?
## சுவிசேஷ பயிற்சி முகாம்



## வாருங்கள் நாம் இணைந்து சுத்த சுவிசேஷத்தைப் பரவச் செய்வோம்

சுவிசேஷ பயிற்சிப் பள்ளியின் நோக்கம் தேசத்தின் இருளான நிலையை மாற்ற,
சுவிசேஷத்தை எங்கும் அறிவிக்கிற தலைமுறையை எழுப்ப வேண்டும்.

**சுவிசேஷ பயிற்சியைப் பற்றிய தகவல்கள்**

நீங்கள் மிகுந்த ஜெபத்துடன் பள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.
தலைசிறந்த சுவிசேஷகர்கள் மற்றும் போதகர்களால் பயிற்சி வழங்கப்படும். தங்கும் இடம் மற்றும் மூன்று வேளை உணவும் வழங்கப்படும் பெண்களுக்கு தனியாக தங்குமிடம் உண்டு

**இடம் :**
**வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையம்,**
**செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்**

**ஏப்ரல்**
**23 - 26**

நீங்கள் பதிவு செய்ய வேண்டிய வழிமுறைகள்

Phone - +91 94980 00449 Website - https://soe.jesuslives.in/camp-2025/ E-Mail - soe@jesuslives.in